பக்கங்கள்:-16+04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 08 | சனிக்கிழமை | 30.11.2024 | அதிர்வு 121

## யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவராக சந்திரசேகர்



யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்

# விடுதலைப்புலிகளை நினைவேந்தியோரை உடன் கைது செய்யுங்கள்

### தென்னிலங்கையில் வலுக்கும் கூக்குரல்



"வடக்கு, கிழக்கில் நவம்பர் 26, 27ஆம் திகதிகளில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும் அந்த அமைப்பின் உறுப்பினர்களைச் சமூக வலைத்தளங்களிலும், பொது இடங்களிலும் நினைவேந்தியவர்களை அநுர அரசு உடன் கைது செய்ய வேண்டும்."

-இவ்வாறுகூட்டாகவலியுறுத்தியுள்ளனர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர மற்றும் உதய கம்மன்பில. 02

### மாவீரர்களை நினைவேந்தி

## பேஸ்புக்கில் பிரசாரம்: 3 இளைஞர்கள் கைது



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினம் மற்றும் மாவீரர் தினத்தை ஊக்குவித்து 02

## இயற்கைப் பேரிடரால் இதுவரை 16 பேர் சாவு!



இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலையால் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 65 ஆயிரத்து 746 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் 16 பேர் பலியாகியுள்ளனர். 19 பேர் காயமடைந்துள்ளனர். 02

## இளம் குடும்பப் பெண் மண்ணெண்ணெய் ஊற்றி தீயில் எரிந்து மரணம்!

### செட்டிகுளத்தில் சம்பவம்



(கி.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் மண்ணெண்ணெய் ஊற்றி தீயில் எரிந்து மரணமடைந்துள்ளார். 02

# புலிகளை நினைவேந்துவதற்கு நிரந்தரத் தடை விதிக்க வேண்டும்

### அநுர அரசிடம் நவீன் திஸாநாயக்க வலியுறுத்து



இலங்கையில் மரணித்த விடுதலைப் புலிகளை அஞ்சலிப்பதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சரும் முன்னாள் ஆளுநருமான நவீன் திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

தமிழர்களின் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இம்முறை மாவீரர் தினம் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, விடுதலைப்புலிகளை அஞ்சலிப்பதற்கு அனுமதி வழங்கக்கூடாது 02

# வவுனியா வைத்தியசாலையில் முதல் தடவையாக ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிரசவிப்பு!

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் முதன் முறையாக ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் பிரசவிக்கப் பட்டுள்ளன.

பதவியாவைச் சேர்ந்த கரப்பவதி ஒருவர் நேற்று இரவு பிரசவ வலியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்குச் சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் 4 குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தாயார் மகப்பேற்று வைத்திய நிபுணர் காமினியால் தொடர்ச்சியாகப் பரிசோதிக்கப்பட்டு வந்துள்ளார். அவரது மகப்பேற்று வைத்திய விடுதியாகிய 7ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டு வைத்தியர் திலீபனால் சிசேரியன் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு நான்கு குழந்தைகளும் பிரசவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிரசவிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

மேற்படி தாயாரும் குழந்தைகளும் நலமாகவுள்ளனர் என்றும், நான்கு குழந்தைகளும் சிறப்பு குழந்தை நலப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# முல்லைத்தீவு கடற்கரையில் சுனாமி ஒலியால் பரபரப்பு!

முல்லைத்தீவு கடற்கரையில் நேற்று சுனாமி எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதால் மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு கடற்கரையை அண்மித்த பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அந்த எச்சரிக்கை இயந்திரங்களில் இருந்தே, இவ்வாறு ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்து சுனாமி வருகின்றதோ? என்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். எனினும், அது சுனாமி அலையால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை அல்ல என்றும், வட்டுவாகல் கடற்படைத் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி ஒத்திகையால் எழுப்பப்பட்ட ஒலி என்றும் மக்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

சுனாமி எச்சரிக்கைக்கு நிகரான ஒலியெழுப்பி பயிற்சியை மேற்கொள்ளும்போது அது தொடர்பில் பொதுமக்களுக்கு முற்கூட்டிய அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் என்றும், கடற்படையினர் மக்களை தேவையற்ற விதத்தில் பதற்றமடைய வைக்கக்கூடாது என்றும் பொதுமக்கள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

## யாழ்ப்பாணம் மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் அங்கீகாரம் மற்றும் உத்தரவின் பேரில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக கடந்த 28ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் நியமிக்கப் பட்டுள்ளார்.

மேற்படி விடயம் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் ஏ. எச்.எம்.எச். அபயரத்ன, கடற்றொழில், அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபருக்கு பிரதியிடப்பட்ட கடிதம் மூலம் அறியத்தரப்பட்டுள்ளது என்று மாவட்ட செயலக ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## இயற்கைப் பேரிடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

98 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 333 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இன்று மதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8 ஆயிரத்து 984 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 596 பேர் இடைத்தங்கள் 245 முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

## பேஸ்புக்கில் பிரசாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேஸ்புக்கில் பிரசாரம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் யாழ்ப்பாணம் உப பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம், கைதான ஏனைய இருவரில் ஒருவர் பத்தேகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றொரு இளைஞர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## புலிகளை நினைவேந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று நவீன் திஸாநாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு நாம் முழுமையான எதிர்ப்பைப் பதிவு செய்கின்றோம். விடுதலைப்புலிகள் அமைப்பு என்பது சட்டவிரோத அமைப்பாகும். அந்த அமைப்பை நினைவுகூர முடியாது. எனது தந்தையையும் விடுதலைப்புலிகளே கொலை செய்தனர். புலிகளுடன் தொடர்புடையவர்களை நினைவுகூருவதற்கு நிரந்தரத் தடை விதிப்பது தொடர்பான உறுதியான முடிவை அநுர அரசு எடுக்க வேண்டும்." – என்றார்.

## விடுதலைப் புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"மரணித்துப்போன பயங்கரவாதிகளுக்கு அநுர அரசு புத்துயிர் கொடுக்கக்கூடாது.

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியினருக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தமைக்காகப் பிரபாகரனின் பிறந்த தினத்தையும், மாவீரர் தினத்தையும் பகிரங்கமாக அனுஷ்டிக்கத் தமிழ் மக்களுக்கு அநுர அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மரணித்துப்போன பயங்கரவாதிகளை நினைவேந்த அனுமதி வழங்குவதா தமிழ் மக்களுக்கு நீங்கள் (அநுர அரசு) செய்யும் நன்றிக் கடன்?

தெற்கில் உள்ள மக்கள் அநுர அரசின் தான்தோன்றித்தனமான இந்தத் தீர்மானத்துக்கு எதிராகப் போராட முன்வர வேண்டும்." – என்றனர்.

## இளம் குடும்பப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம் – பெரியகுளம் பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் இரவு வீட்டில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரிந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு செட்டிகுளம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

சம்பவத்தில் செட்டிகுளம், பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 29 வயது இளம் குடும்பப் பெண்ணே மரணமடைந்தவராவார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிரிழந்த மாணவர்களது வீடுகளுக்கு

# மாவட்ட அரச அதிபர் நேரில் சென்று அனுதாபம் தெரிவிப்பு!!





(சர்ஜூன் லாபீர்)

மாவடிப்பள்ளியில் வெள்ளத்தில் உயிரிழந்த சம்மாந்துறையைச் சேர்ந்த மதராசா மாணவர்களின் வீடுகளுக்கு நேரடியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்திக அபேவிக்ரம இன்று (30) சென்று அனுதாபங்களை தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் அழைப்பின்பேரில் வருகை தந்த மாவட்ட அரச அதிபர் உயிரிழந்த மாணவர்கள் ஒவ்வொருவருடைய வீடுகளுக்கும் சென்று குடும்ப உறுப்பினர்களை சந்தித்து தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எல்.மஹ்ரூப், அம்பாறை மாவட்ட செயலக கணக்காளர் ஐ.எம் பாரீஸ், சம்மாந்துறை உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல். சர்தார் மிர்ஸா, நிதி உதவியாளர் ஏ.எம்.நவாஸ் உட்பட அரச உயர் அதிகாரிகள் கிராம சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# மனைவியைக் கோடாரியால் வெட்டி கொலை செய்த கணவன் கைது!



கதிர்காமம் கொயாகல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மனைவியை கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தனது மனைவியை கோடரியால் வெட்டி கொலை செய்த பின்னர் தலைமறைவாகி இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குடும்பத் தகராறு காரணமாக மனைவியுடன் சண்டையிட்ட நிலையில், கோடரியால் மனைவியின் தலையில் தாக்கி கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கணவர் ஒருவித விஷமருந்தியிருந்ததால் மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நிலந்த பிரதீப் குமார என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவரது உடல்நிலை தொடர்பில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபருக்கு பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீரற்ற வானிலையால் அழிந்த பயிருக்கு இழப்பீடு கிடைக்கும்!

## விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவிப்பு



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் அழிவடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயா, போஞ்சி, மிளகாய் மற்றும் வெங்காயம் போன்ற பயிர்களுக்கு இழப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட பயிர்களுக்கு மேலதிகமாக மலையக மற்றும் தாழ்நில மரக்கறி விவசாயிகள் மற்றும் பழ விவசாயிகளும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் ஓரளவு நிவாரணம் வழங்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

இதன்படி, ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக அழிவடைந்த பயிர்களுக்கு 40,000 ரூபாவுக்கு உட்பட்டு இழப்பீடு வழங்கப்படும் என பிரதி அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை குறைந்த பின்னர் பயிர் சேதம் தொடர்பான விவரங்களைச் சேகரித்து நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அழிவடைந்த பயிர்களை மீள பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு இலவச பயிர் விதைகள் வழங்கும் முறைமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

# நாவலர் நினைவாக மரம் நடுகை



(த.சுபேசன்)



விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையிலேயே எனும் தொனிப் பொருளில் ஆறுமுக நாவலர் நினைவாக கடந்த சனிக்கிழமை இரு பாலையில் பயன்தரு மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன.

பசுந்தேசம் அமைப்பும் இயற்கையின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து மரநடுகைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அதே ரணிலின் பாணி!

சுமார் இரண்டு வருடங்களாக நடத்தப்படாமல் நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை புதிய வேட்புமனுக்களை கோரி நடத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளதாகவும் -

இதனால் 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஏப்ரல் மாதம் நடத்த அரசாங்கம் ஆலோசனைகளை நடத்தியுள்ளதாகவும் - செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்தப்படும் என அண்மையில் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

ஆனால், கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ -

“ஜனவரி மாதம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் இல்லை. இடைக்கால கணக்கறிக்கையின் ஊடாக தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலைகளும் இல்லை என்பதால் புதிய வரவு - செலவுத் திட்டத்திலேயே தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ள முடியும்.” - என்றார்.

இந்த நிலையில் இந்த வாரம் ஆரம்பத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பிலும் அது தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தேர்தலைஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்களின் கீழ் நடத்துவதில் உள்ள சிக்கல் நிலைகள் குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. பழைய வேட்புமனுக்களின் கீழ் தேர்தலை நடத்த முடியாதென்பதை ஏற்றுக்கொள்வதாக எதிர்க்கட்சிகளின் சார்பில் பங்குபற்றியிருந்த கட்சித் தலைவர்களும் தெரிவித்திருந்தமையால் புதிய வேட்புமனுக்களைக் கோரித் தேர்தலை நடத்த இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். அதன் பிரகாரம் எதிர்வரும் வாரம் கட்சித் தலைவர்கள் இதுதொடர்பில் கலந்துரையாடல் நடத்தி இறுதி தீர்மானமொன்றை எட்டவும் உள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நடத்த அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முழுமையான இணக்கப்பாடுகளை எட்டிய பின்னர் இந்த அறிவிப்பை அரசாங்கம் வெளியிட தயாராகி வருவதாகவும் தெரியவருகிறது.

புதிய வரவு - செலவுத் திட்டமே ஏப்ரலில்தான். அதில் இந்தத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கி, அதன் பின்னர் தேர்தலை அறிவித்து, புதிய வேட்பு மனுக்களைக் கோரி, தேர்தலை நடத்துவது என்றால் அது அடுத்த ஜூலையில்தான் இனி சாத்தியம்.

மற்றைய தேர்தல்களைக் குழப்பாமல் நிலுவையில் உள்ள ‘உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2023’ஐக் காலதாமதமின்றி நடத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சட்டம் ஒன்றின் மூலம் அல்லாமல் -அல்லது உயர் நீதிமன்றத்தை அணுகி அனுமதி பெறாமல் - அரசியல் தலைவர்கள் கூடி உயர் நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்புக்கு மாறாக முடிவு எடுத்து, அதனை ஒத்திவைக்க முடியாது.

அது மாத்திரமல்ல, முன்னர் இந்தத் தேர்தலை ஒத்திவைக்கச் செய்வதற்கு அத்தேர்தலுக்கான நிதியைத் தாம் நிதி அமைச்சரும் கூட என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வெட்டி திருகுதாளம் பண்ணினார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதற்காக நீதிமன்றின் காட்டத்துக்கும் இலக்கானார்.

இப்போதும் நீதிமன்றத் தீர்ப்பை - உத்தரவை - உதாசீனம் செய்து, அதே தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கு, அதே நிதிப் பிரச்சினையை அடுத்து வந்த அரசும் முன்வைப்பது எல்லா அரசுத் தலைமைகளுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தாம் என்பதை நிரூபித்து நிற்கின்றது.

# நிந்தவூர் மாணவனின் சடலம் மக்கள் வெள்ளத்தில் நல்லடக்கம்



(நூருல் ஹுதா உமர் )

ஐந்து நாள்களுக்குப் பின்னர் இன்று (30) காலை கண்டெடுக்கப்பட்ட நிந்தவூர் மத்ரஸா மாணவன் கலீல் தஷ்ரீக்சின் சடலம் சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலய மைதானத்தில் பெருந்திரளான மக்கள் வெள்ளத்தில் தொழுகை நடத்தப்பட்டு சம்மாந்துறை முஅல்லா மஹல்லாவில் பெரும் திரளான மக்கள் மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

காரைதீவு – மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போயிருந்த நிலையில் அன்றைய தினம் மாலை மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது 5 மாணவர்கள் வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர். ஒரு மாணவனின் சடலம் இன்று (30) காலையே மீட்கப்பட்டது.

இந்தச் சடலத்தின் நல்லடக்கமே இன்று இடம்பெற்றது.

திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மரண விசாரணைகளை மேற்கொண்டு குடும்பத்தினரிடம் சடலத்தை ஒப்படைத்திருந்தார்.




# சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கான ஊக்குவிப்பு தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை



“வடக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கான ஊக்குவிப்புக்கள் கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருந்தாலும் அவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு தொடர்ச்சியான ஊக்குவிக்கும், கண்காணிப்பும் இருக்க வேண்டும். அதன் ஊடாக தேசிய மொத்த உற்பத்திக்கான வடக்கு மாகாணத்தின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய முடியும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தொழில் முயற்சியாண்மை, ஆய்வு மற்றும் முன்னெடுப்புகளுக்கான “கேட்“ நிறுவனத்தின் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட வியாபார மேம்பாட்டு இணைப்பு அலகின் ஏற்பாட்டில் நடைபெற்ற “வடக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகளுக்கான வாய்ப்புக்களைத் திறத்தலும், தந்திரோபாய ஈடுபாடும்” என்ற தலைப்பிலான கருத்தரங்கு நேற்று வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களுள் ஒருவராக இணையவழியில் பங்கேற்று உரையாற்றுகையில் ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளுநர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

“முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின் மாவட்ட செயலராக நான் பணியாற்றிய காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை மேம்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால், அவை தொடர்ச்சியாக நடைபெறவில்லை. போருக்கு முன்னர் எமது வடக்கு மாகாணத்தில் பல தொழிற்சாலைகள் இருந்தன. போர் மற்றும் அதன் பின்னரான இடப்பெயர்வுகளால் அவை அழிவடைந்துள்ளன.

போரின் பின்னர் வடக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்பு மிக முக்கிய பிரச்சினையாக தோற்றம் பெற்றிருக்கின்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரைப் பலப்படுத்துவதன் ஊடாக வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சினைக்கு ஓரளவு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

இத்தகைய தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களான நிதி மூலத்தை அடையாளம் காணுதல், அவர்களின் தொழில் முயற்சிகளை அடுத்த தளத்தை நோக்கி விரிவாக்குவதற்குரிய ஆலோசனைகள் என்பன இருக்கின்றன. அவற்றை இப்படியான கருத்தரங்குகள் மூலம் வழங்குவதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் எடுக்கின்ற முயற்சி வரவேற்கதக்கது.

இவற்றுக்கு அப்பால் இத்தகைய தொழில்முனைவோர் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கின்றன. கண்காட்சிகள் நடத்தப்படும்போது அங்கு கொண்டு வந்து தமது பொருட்களை சந்தைப்படுத்தும் நிலைமையே இருக்கின்றது. அவர்களுக்கு தொடர்ச்சியான சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க மாகாணசபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல முதலீட்டாளர்கள் வடக்கை நோக்கி வரத் தொடங்கியுள்ளார்கள். இது சாதகமான மாற்றம். இதைப் பயன்படுத்தி தேசிய உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யவேண்டும். அதேநேரம் எமது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கும் தொடர் ஊக்குவிப்புக்களை வழங்கி அவர்களையும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த வேண்டும். இதன் ஊடாக புதிதாக இளம் தொழில்முயற்சியாளர்களையும் உருவாக்க முடியும்.” – என்றார்.

# அரச ஊழியர்களின் சம்பளத்தை முற்பணமாக வழங்கக் கோரிக்கை

(எம்.எப்.றிபாஸ்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டு மாத சம்பளத்தை முற்பணமாக வழங்குமாறு அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தால் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் யூ.எல்.எம்.பைசர் ஒப்பமிடப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் நாட்டில் ஏற்பட்ட பெரு மழை மற்றும் வெள்ளம் காரணமாக அதிக எண்ணிக்கையான அரச உத்தியோகத்தர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். அரச ஊழியர்கள் என்ற காரணத்தால் அரசாங்கத்தாலோ அல்லது தனியார் தொண்டு நிறுவனங்களாலோ வழங்கப்படுகின்ற எவ்விதமான உதவிகளும் கிடைப்பதில்லை.

இதனால் பொருளாதார ரீதியாகவும், வாழ்வாதார ரீதியாகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள அரச உத்தியோத்தர்களுக்கு இரண்டு மாத அடிப்படைச் சம்பளத்தை முற்பணமாக வழங்குமாறும் அவற்றை வட்டி இல்லாமல் 24 மாதங்களில் மீளப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.– என்றுள்ளது.

# பதுளையில் மின்சாரம் தாக்கி ஆண் ஒருவர் பரிதாப மரணம்

மின்சாரம் தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகல்ல பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹாலிஎல, திகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தனது பயிர்களைக் காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக வயலை சுற்றிப் பொருத்தியிருந்த மின்சார வேலியில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

## 30/11/ & 01/12.2024

100$ க்கு மேல் கொள்வனவு செய்து 10lb Grace Basmati Rice Bag ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்




139 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7

# சீரற்ற காலநிலை காரணமாக காற்றின் தரத்தில் மாற்றம்!

## சுவாசப் பிரச்சினைகளுக்கு வாய்ப்பு



கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இன்று (30) காற்றின் தரக் குறியீடு (SLAQI) 92 முதல் 120 வரை இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரம் சற்று ஆரோக்கியமற்ற நிலைக்கு உயரலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலைமையால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம் எனவும் அவ்வாறான சிரமங்கள் ஏற்பட்டால் வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவில் தீயில் கருகி முதியவர் ஒருவர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் தீயில் சிக்கி முதியவர் உடல் கருகி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (29) இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த 75 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளிர் காரணமாக வீட்டில் எரித்த தீ பரவியமையே இந்த மரணம் ஏற்படக் காரணம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## லஞ்சக் குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி கைது!



லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவர் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பான பிரச்சினையை விசாரிப்பதற்கும் நீதிமன்றத்தால் மோட்டார் வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதற்கும் குறித்த பொலிஸ் அதிகாரி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான குளிரூட்டியை லஞ்சமாக கேட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வளர்ப்பு நாயால் உயிர் தப்பிய குடும்பம்!

களுத்துறை, தொடங்கொட பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கமகொட பகுதியில் நாயால் குடும்பம் ஒன்று காப்பாற்றப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் பெய்த கடும் மழையுடன் கூடிய காற்று காரணமாக புளியமரத்தின் கிளையொன்று வீடொன்றின் மீது வீழ்ந்துள்ளது.

இதனால் வீடு முற்றாக இடிந்துள்ளது. வீட்டில் இருந்தவர்கள் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

வீட்டில் இருந்த வளர்ப்பு நாய்தான் அவர்கள் உயிர் தப்பியதற்குக் காரணம் என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இன்று அதிகாலை 2 மணியளவில் வீட்டு உரிமையாளரின் படுக்கையறையின் படுக்கைக்கு அருகில் வந்த நாய் நுளம்பு வலையை கடித்து கிழித்துள்ளது. வீட்டு உரிமையாளரின் ஆடையைக் கடித்து இழுத்துள்ளது.

வீட்டின் ஏனையவர்கள் உறங்கும் அறைக்கும், உரிமையாளரை இழுத்து சென்ற நாய், அவர்களையும் வெளியே அழைத்துள்ளது.

குடும்பத்தினர் வெளியே வந்து சில நிமிடங்களின் மரத்தின் கிளை வீட்டின் கூரையின் மீது விழுந்துள்ளது. வீட்டின் சமையலறையின் சுவர்கள் கட்டிலின் மீது விழுந்துள்ளன.

நாயின் செயற்பாட்டால் அனைவரும் விழிந்துக் கொண்டமையால், உயிராபத்தில் இருந்து தப்பினர் என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

# குளியாப்பிட்டிய வீடொன்றில் இன்று அதிகாலை முதலை!

குளியாப்பிட்டிய தியகலமுல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இன்று (30) அதிகாலை 5 அடி நீளமுள்ள முதலை ஒன்று புகுந்துள்ளது.

தற்போது பெய்து வரும் மழை காலநிலை காரணமாக முதலை வந்திருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்து முதலையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.



# யானை தாக்கி உயிரிழந்த புனேவ கடற்படை அதிகாரி!



புனேவ கடற்படை தளத்தில் கடமையாற்றும் லெப்டினனட் கொமாண்டர் ஒருவர் நேற்று இரவு கடற்படைத் தளத்துக்கு அருகில் யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார் என்று புனேவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிட்டம்புவ, குருநாகல் பகுதியில் வசித்து வந்த குறித்த கடற்படைஅதிகாரி பணிநிமித்தமாககொழும்புக்குசென்றுவிட்டு முகாமுக்கு திரும்பிய போது யானை தாக்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானையின் தாக்குதலில் சிக்கி பலத்த காயங்களுக்குள்ளான கடற்படை அதிகாரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த உத்தியோகத்தரின் மரணம் தொடர்பான விசாரணைகளை புனேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமறைக் கலாமன்றத் தினமும் வைரவிழா ஆண்டின் ஆரம்பமும்

திருமறைக் கலாமன்றம் 1965 ஆம் ஆண்டில் கலைத் தூது நீ.மரிய சேவியர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட் டது.

இந்த மன்றம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தனது மன்றத் தினத்தை கொண்டாடுகின்றது. இந்த நாளில் வைர விழா ஆண்டில் கால்பதிக்கின்றது.

இதனை முன்னிட்டு அன்றைய நாளில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 6.30 மணிக்கு இல. இல.17,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞானசுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடும், முற்பகல் 10 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ் வும் இடம்பெறும்

அன்று மாலை 4 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சனும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'நஞ்சுண்ட கண்டன்' நாடகம், 'விண்ணக வீரன்' வடமோடி நாடகம் என்பவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் அறுபதாவது ஆண்டில் கால் பதிப்பதை முன்னிட்டு அடுத்த ஆண்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அறபுக் கல்லூரி மாணவர்களின் உயிரிழப்புக்கு

# படையினரின் பொறுப்பற்ற செயற்பாடுதான் காரணம்!

### மக்கள் குற்றச்சாட்டு என மு.கா. தலைவர் ஹக்கீம் கிழக்கு ஆளுநரிடம் எடுத்துரைப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

அறபுக்கல்லூரியின்மாணவர்களதுஉயிரிழப்புக்குபொலிஸ் மற்றும் முப்படையினரின் பொறுப்பற்ற செயற்பாடுதான் காரணம் என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள் ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்ன சேகரவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை மாலை கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகா ணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த பாதிப்புகள் தொடர்பிலும் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மாவடிப்பள்ளி பாலத்தில் உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அறபுக் கல்லூரி மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் உயரிழந்த துயர சம்பவமானது பொலிஸ் மற்றும் முப்படையினரின் அவதானக் குறைவாலேயே நிகழ்ந்துள்ளது.

குறித்த பாலத்துக்கு மேலாக வெள்ளம் பெருக்கெடுத்தி ருந்த நிலையில் பாதையை மூடாமல் போக்குவரத்துக்கு அனுமதியளித்தமை பொறுப்பற்ற செயற்பாடாகும்.

உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு தாம் விஜயம் செய்த போது அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் குற்றச்சாட்டை முன்வைத்து விசனம் வெளியிட்டனர் என்று ரவூப் ஹக்கீம் ஆளுநரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.


ஆகையால் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய ரவூப் ஹக்கீம், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு துரிதமாக இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும் இதுவரை மீட்கப்படாத மாணவனை மீட்பதற்காக மேலதிக நடவடி-க்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

இக்கோரிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அவசர உதவிகள், நிவாரண நடவடிக்கைகள் மற்றும் அனர்த்த பாதிப்புகளை நிவர்த்தி செய்து இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநரிடம் அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை மாவடிப்பள்ளி பாலத்தில் இடம்பெற்ற உயிரிழப்புகள் தொடர்பிலும் இதுவரை மீட்கப்படாத மாணவ னைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பொலிஸ் மற்றும் படை அதிகாரிகளை தொடர்பு கொண்டு பேசியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா.



# ஹிஸ்புல்லா - இஸ்ரேல் போர் நிறுத்தம்! காசாவில் ஹமாஸூ டன் போர் தொடருமா ?

இஸ்ரேலின் இராணுவ தாக்குதல்களை காசாவில் நிறுத்தினால் போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஹமாஸூம் தயார் என தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஹமாஸ் மீது இஸ்ரேல் போரை அறிவித்தது.

போர் தொடங்கி சமீபத்தில் ஓராண்டு நிறைவடைந்த நிலையில், பாஸ்தீனத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களை இஸ்ரேல் கொன்று குவித்திருந்தது. அதாவது சுமார் 45,000க்கும் அதிகமான பாலஸ்தீன மக்கள் இப்போரில் கொல்லப்பட்டனர்.

பின்னர் காசா போரில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக ஹிஸ்புல்லா களம் இறங்கியது. இதற்கு எதிர் தாக்குதல் நடத்த லெபனான் மீதும் போரை இஸ்ரேல் அறிவித்தது. இந்நிலையில் இந்த போர் தற்போது நிறுத்தப்படுவதற்கான ஒப்பந்தம் வெளியாகி உள்ளது.

## அமெரிக்கா மத்தியஸ்த்தம்

அமெரிக்காவின் புதிய தலைமையை ஏற்ற டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகிகளின் மத்தியஸ்தத்துடன் நவம்பர் 27 இல் எட்டப்பட்ட இந்த போர் நிறுத்த உடன்படிக்கையின்படி ,ஸ்ரேலிய துருப்புகள் தெற்கு லெபனானில் இருந்து அறுபது நாள்களுக்குள் படிப்படியாக வாபஸ் பெறவுள்ளன.

அதேநேரம் 2006 இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையிலான போர் முடிவில் நிறுவப்பட்ட எல்லை ஒன்றான லிடானி நதியின் தெற்கு பகுதியில் இருந்து ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் அவர்களின் ஆயுதங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். அவர்களுக்கு பதில் அங்கு லெபனான் அரச படை நிலை நிறுத்தப்படவுள்ளது.

லெபனானின் ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலுக்கு இடையே நவம்பர் 27 முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த நிலையில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு தயாராக இருப்பதாக அங்கு ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் பணயக்கைதிகளின் பரிமாற்றத்திற்கான உடன்படிக்கை ஒன்றுக்கு தயாராக இருப்பதாக மத்தியஸ்தர்களான எகிப்து, கட்டார் மற்றும் துருக்கியிடம் நாம் அறிவித்துள்ளோம். எவ்வாறாயும் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதில் இஸ்ரேல் இடையூறாக இருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த பல மாதங்களாக உக்கிர மோதல்கள் ,டம்பெற்று வந்த நிலையில் ஹிஸ்புல்லா– இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்டு சில மணி நேரத்தின் பின்னரே ஹமாஸ் இந்த அறிவிப்பை வெளியுட்டுள்ளது.

## ஹிஸ்புல்லா - இஸ்ரேல் போர் நிறுத்தம்

ஹிஸ்புல்லா இஸ்ரேல் போர் நிறுத்த உடன்படிக்கை கடைசியில் அமைதி உடன்படிக்கை ஒன்றுக்கு இட்டுச் செல்வதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை அறுபது நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஆதரவாக 10:1 என வாக்களித்த நிலையிலேயே தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன.

இதனையடுத்து இடம்பெயர்ந்த லெபனான் மக்கள் தமது வீடுகளுக்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர். எனினும் இஸ்ரேலின் தாக்குதல்களில் பல கிராமங்கள் மற்றும் நகரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் போர் நிறுத்தம் ஆரம்பிக்கும் கடைசி தருணம் வரை இரு தரப்பினதும் தாக்குதல்கள் நீடித்தன. போர் நிறுத்தத்திற்கு நான்கு மணி நேரத்துக்கு முன்னர் பெய்ரூட்டின் சில பகுதிகளில் ,ருந்து மக்களை வெளியேற இஸ்ரேல் உத்தரவிட்ட நிலையில் ஒரு மணி நேரத்திற்கு முன் சரமாரி தாக்குதல்களை நடத்தியது. போர் நிறுத்தப்படுவதற்கு சில

தொடர்ச்சி▼








# ஹிஸ்புல்லா - இஸ்ரேல் போர் நிறுத்தம்! காசாவில் ஹமாஸூ டன் போர் தொடருமா ?

தொடர்ச்சி▲

மணி நேரத்துக்கு முன்னரும் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியது.

தெற்கு லெபனான் மக்கள் தமது வீடுகளுக்கு திரும் புவதற்கு எதிராக இஸ்ரேல் பாதுகாப்புப் படை போர் நிறுத் தத்தை ஆரம்பிப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தது. எவ்வாறாயினும் போர் நிறுத் தம் ஆரம்பிக்கப்பட்ட விரைவிலேயே வெளியேற்றப்பட்ட தெற்கு லெபனான் குடிமக்கள் தமது வீடுகளுக்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர்.

### லெபனானில் தாக்குதல்கள்

கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே பரஸ்பரம் மோதல்கள் இடம்பெற்று வந்த நிலையில் கடந்த செப்டெம்பரில் லெபனான் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்திய இஸ்ரேல், அங்கு தரைப் படையையும் அனுப்பியது.

இந்தப் போர் லெபனானில் கடந்த பல தசாப்தங்களில் அதிக உயிரிழப்பு கொண்டதாக இருந்ததோடு நாலாயிரம் பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

தற்போது அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் எட்டப் பட்ட இந்த போர் நிறுத்த உடன்படிக்கையின்படி இஸ்ரே லிய துருப்புகள் தெற்கு லெபனானில் இருந்து படிப்படியாக வாபஸ் பெறவுள்ளன.

அதேநேரம் 2006 இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையிலான போர் முடிவில் நிறுவப்பட்ட எல்லை ஒன்றான லிடானி நதி யின் தெற்கு பகுதியில் இருந்து ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் அவர்களின் ஆயுதங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். அவர்களுக்கு பதில் அங்கு லெபனான் அரச படை நிலை நிறுத்தப்படவுள்ளது.

### லெபனான் அரசு வரவேற்பு

நீடித்த அமைதியை மீட்டெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கும் என்பதோடு இரு நாடுகளிலும் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளுக்கு பாதுகாப்பாக திரும்ப அனுமதிக்கும் என்று இந்த போர் நிறுத்தத்துக்கு மத்தியஸ்தம் வகித்த அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் கூட்டாக அறிக்கை வெளி யிட்டுள்ளனர்.

இந்த போர் நிறுத்தத்தை வரவேற்றிருக்கும் லெபனான் பிரதமர் நஜிப் மிகாதி, நாட்டின் அமைதி மற்றும் ஸ்திரத்தன் மையைநிலைநிறுத்துவதுமற்றும்குடிமக்கள்தமதுவீடுகளுக்கு திரும்புவதை அனுமதிப்பதற்கு இது அடிப்படையாக இருப்பதா கவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த உடன்படிக்கையை முழுமையாக கடைப் பிடிக்குமாறு இஸ்ரேலை வலியுறுத்திய அவர் தற்போது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறும்ப டியும் ஐ.நா. தீர்மானத்தை மதிக்கும்படியும் குறிப்பிட்டுள் ளார்.

### நெதன்யாகு கடும் எச்சரிக்கை

அதேவேளை இந்த உடன்படிக்கையின் எந்த ஒரு பகுதியையும் ஹிஸ்புல்லா மீறினால் தாக்குதலை நடத்து வதற்கு இஸ்ரேல் தயங்காது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

போர் நிறுத்தம் தொடர்பில் ஹிஸ்புல்லா தரப்பில் இருந்து உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. ஆயினும் இந்தப் போரினால் ஹிஸ்புல்லாவின் முக்கிய தலைவர்கள் கொல லப்பட்டு அதன் இராணுவ மற்றும் ஆயுதக் கட்டமைப்பை பலவீனப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தப் போர் நிறுத்தம் காசா மீது இஸ்ரேலுக்கு அதிக அவதானம் செலுத்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 2023 ஒக்ரோபர் 7இல் இஸ்ரேல் மீது பாலஸ்தீன போராளி கள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த இந்தப் போரில் ஹமாஸ் அமைப்பை முற்றாக அழிப்பதாக இஸ்ரேல் சூளு ரைத்து வருகிறது.

எவ்வாறாயினும் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக காசா வில் இஸ்ரேல் சராமாரித் தாக்குதல்களை நடத்தியபோ தும் அது பாலஸ்தீன போராளிகளின் எதிர்ப்பை தொடர்ந்து சந்தித்து வருகிறது.

காசாவில் பதினான்கு மாதங்களை நெருங்கி இருக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் இதுவரை 45000 மேல் பொது மக்கள் கொல்லப்பட்டு 110000 மேலாக பாலஸ்தீன மக்கள் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.







# பேசாலை புனித வெற்றி அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு கொடியேற்றம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் எதிர்வரும் எட்டாம் திகதி (08) நடைபெற இருக்கும் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய வருடாந்த பெருவிழாவை முன்னிட்டு நேற்று வெள்ளிக் கிழமை (29) மாலை புனித வெற்றி அன்னையினதும் பாப்பரசரதும் கொடி, திருச் செபமாலையைத் தொடர்ந்து பேசாலை பங்கு தந்தையால் ஏற்றிவைக்கப்பட்டது.

பங்கு தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தலைமையில் ஒன்பது நாள்கள் நடைபெற இருக்கும் நவநாள்களின் முதல் நாள் நிகழ்வாக இந்தக் கொடியேற்றம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வின்போது நவநாட்களின் ஆரம்ப மறையுரை போதகராக வருகை தந்திருந்த மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி றொக்சன் குரூஸ் அடிகளார், மன்னார் வாழ்வோதயம் இயக்குனர் அருட்பணி க.அருள்ராஜ் குரூஸ் அடிகளார் மற்றும் பேசாலை உதவி பங்கு தந்தை அருட்பணி பியோ அடிகளார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அரச அதிகாரிகள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே ஊழலற்ற ஆட்சி!

## முன்னெடுக்க முடியும் என்கிறார் அஷ்ரப் தாஹிர் எம்.பி





(அபு அலா )

அன்மைக் காலமாக எதிர்நோக்கி வரும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலமைகள் குறித்து ஆராய்வதற்கான நிந்தவூர் பிரதேச அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நிந்தவூர் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் (29) இடம்பெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லதீபின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையடலில் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர், ஏ.ஆதம்பாவா, எம்.எஸ்.உதுமா லெவ்வை, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பனிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் உள்ளிட்ட பிரதேச சபை செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அனர்த்தம் வந்தபோது கடுமையான பாதிப்புகள் எமது பிராந்தியத்தில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் என்ன? அதற்கு முன்னாயத்த திட்டங்களாக எதை முன்னெடுத்தார்கள் என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

குடியிருப்பு கானிகளைவிட வீதிகள் உயரமாக அமைக்கப்பட்டிருப்பதே வெள்ளநீர் வழிந்தோடாமைக்கான மிக முக்கிய காரணமாகவும், வடிகால்கள் துப்பரவு செய்யப்படாமல் காணப்பட்டமை இன்னுமொரு காரணமாக இருந்தது என்று கிராம சேவையாளர்களால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

விவசாயிகளின் வயல்காணி அழிவுகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதார பாதிப்புக்கள் குறித்தும் அவற்றுக்கான நஷ்ட ஈடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார மேம்பாடுகளை பொறுத்தே இந்த அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் அமையும. கடந்தகால ஆட்சியாளர்கள் மீது மக்கள் கொண்ட வெறுப்பின் காரணமாகவே, மாற்றம் ஒன்றை வேண்டி இந்த அரசுக்கு அதிகமான வாக்குகளை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

இந்த ஆட்சியில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் செயற்படுவதை அறிய முடிகின்றது. அதேபோன்று அரச அதிகாரிகளும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி சிக்கனமான முறையில் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவி வழங்கினால் மாத்திரமே ஊழலற்ற ஆட்சியை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.




# பங்களாதேஷில் இந்துக்கள் மீதான தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

பங்களாதேஷ் இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலைக் கண்டித்து தமிழகம் முழுவதும் டிசம்பர் 4 ஆம் திகதி இந்து அமைப்புகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

பங்களாதேஷ் இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலைக் கண்டித்து, தமிழகத்தில் அனைத்து இந்து அமைப்புகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி வழங்க கோரி, சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் கரு.நாகராஜன் நேற்று மனு அளித்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“இந்தியாவில் இருந்து பங்களாதேஷ் பிரிக்கப்பட்ட காலத்தில் இருந்து, பங்களாதேஷில் எப்போது என்ன பிரச்சினை நடந்தாலும், அங்கிருக்கும் சிறுபான்மை இந்து மக்கள் மீது தாக்குதல் நடத்துவது, அவர்களின் உடமைகளைக் கொளுத்துவது தொடர்கதையாகி வருகிறது.

அங்கு இந்து மக்களின் உரிமைகள் மீட்கப்பட வேண்டும். சிறுபான்மை இந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். உலகில் எந்த மூலையிலும் இந்து மக்களுக்கு பாதிப்பு என்றால், அவர்களுக்காக குரல் கொடுக்க இந்தியாவில் உள்ள 120 கோடி இந்து மக்களும் தயாராக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டவும், பங்களாதேஷ் அரசுக்கு நமது கண்டனத்தை தெரிவிக்கவும், தமிழகத்தில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் டிசம்பர் 4 ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது.

இதில் இந்து அமைப்புகள், ஆன்மிக அமைப்புகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர். அதற்கான அனுமதியும், பாதுகாப்பும் தர வேண்டும் என தமிழக காவல்துறை தலைமை அலுவலகத்தில் கேட்டிருக்கிறோம். இந்த ஆர்ப்பாட்டம் பா.ஜ.க. சார்பில் நடக்கவில்லை.பங்களாதேஷ் இந்து மக்கள் உரிமை மீட்புக் குழு என அமைக்கப்பட்டு அதன் சார்பாக நடக்கிறது.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்பட சிறுபான்மை அமைப்பினர் வரை அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பார்கள். ”– என்றார்.

# பக்குவமாகப் பேசுவதற்கு கற்றுக்கொள்ள நினைக்கிறேன்!

## நடிகை கஸ்தூரி தெரிவிப்பு



மகனின் படிப்பும், எனது நடிப்பும் தடைபட்டுள்ளதால் காவல் நிலையத்தில் கையெழுத்திடும் நடைமுறையில் தளர்வு கோரியுள்ளேன் என நடிகை கஸ்தூரி தெரிவித்துள்ளார்.

தெலுங்கு மொழி பேசும் மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் நடிகை கஸ்தூரியை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர், கடந்த 21 ஆம் திகதி நிபந்தனை பிணையில் வெளியே வந்த அவர், தினமும் எழும்பூர் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டு வருகிறார். அந்த வகையில் நேற்று வெள்ளிக்கிழமை கையெழுத்திட வந்த கஸ்தூரி, செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“ஆக்ரோஷத்தை குறைத்துவிட்டு, அறிவை வளர்த்துக் கொள்ளலாம் என்பது எனது முடிவாக உள்ளது. குறிப்பாக, பக்குவமாக உணர்ச்சிவசப்படாமல் பேசுவது எப்படி என்பதை 30 நாட்களில் கற்றுக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

4 ஆண்டுகளாக ஹைதராபாத்தில்தான் வசித்து வருகிறேன். இரண்டு படம், ஒரு தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்து வருகிறேன். படப்பிடிப்பு தடைபட்டுள்ளது. எனது மகனும் அங்கேதான் படித்து வருகிறார். மகனின் படிப்பும் தடைபட்டு இருப்பதால், பொலிஸ் நிலையத்தில் கையெழுத்து போடும் நடைமுறையில் தளர்வு கோரி உள்ளேன். இது தொடர்பான மனு, எதிர்வரும், 2 ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

எனக்கு விருப்பமான நல்ல முடிவு கிடைக்கும் என நம்புகிறேன். கானா பாடகி இசைவாணி விவகாரத்தில், அவர் மீது நடவடிக்கை எடுக்காததற்கான பதில் அனைவருக்கும் தெரியும். எனது கைது விவகாரத்தில் தி.மு.க. கூட்டணியில் உள்ள கம்யூனிஸ்ட், வி.சி.க. கட்சியினரும் பொதுமக்களும் ஆதரவு அளித்தனர். அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.”– என்றார்.







# உக்ரைன் தலைநகரை குறிவைத்து ரஷ்யா 90 ஏவுகணைத் தாக்குதல்

ரஷ்யா 90 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மற்றும் சுமார் 100 ஆளில்லா விமானத் தாக்குதல்கள் உக்ரைன் தலைநகரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விளாடிமீர் புட்டின், நேற்று முன்தினம் ரஷ்யாவின் புதிய ஹைப்பர் சோனிக் ஏவுகணை மூலம் கியேவில் உள்ள உக்ரைனின் கட்டளை மையங்களைத் தாக்கப்போவதாக அச்சுறுத்தியிருந்தார்.

இந்த அச்சுறுத்தலையடுத்தே நேற்று இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது, உக்ரைன் மக்கள் பெருந்தொகையானவர்கள் மின்சாரமின்றி இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்

அதேவேளை, உக்ரைனுடனான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுக் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளான நிலையில், தற்போது இரு தரப்பினரும் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில், அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் பதவியினை ஏற்பதற்கு முன்னர் இரு தரப்பினரும் நவீன வலுவான ஆயுதங்களைப் பரஸ்பரமாகப் பிரயோகித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# போரை முடிவுக்கு கொண்டு வர நான் கையெழுத்திடவில்லை

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவிப்பு

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தான் கையெழுத்திடவில்லை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது வெறும் ஒரு போர்நிறுத்தம் மாத்திரமே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, போர்நிறுத்தத்தை மீறும் எந்தவொரு வேளையிலும் லெபனானுக்கு எதிரான போரை மீண்டும் தொடங்க இஸ்ரேல் இராணுவம் தயாராக இருக்கும் என்றும் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலை தொடர்ந்து ஓராண்டாக நீடிக்கும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், ஹமாஸ் அமைப்பிற்கு ஆதரவாக ஈரானின் ஹிஸ்புல்லா அமைப்பும் போரில் ஈடுபட தொடங்கியது.

இதன்காரணமாக போர் வலுப்பெற்று ஈரான், லெபனான் வரையில் நீண்டு சென்றதை தொடர்ந்து, இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு உள்ளதாக அறிவிக்கப்பட்டது.



இந்த நிலையில், லெபனானில் இடம்பெற்று வரும், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்புடனான மாதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையும் ஒப்பு கொண்டுள்ளது.

இப்போதைக்கு, 60 நாள்களுக்குள் நடைமுறைப்படுத்தப்படும் இந்த போர்நிறுத்தம் தொடருமா என்பது குறித்து சர்வதேச ரீதியில் சந்தேகங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 04

கனடா முரசு

சனிக்கிழமை 30/11/2024

## காணாமல் போன மலையேறி 50 நாள்களின் பின்னர் மீட்பு

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் காணாமல் போனதாக கூறப்பட்ட மலை ஏறி ஒருவர் 50 நாள்களின் பின்னர் மீட்கப்பட்டுள்ளார்.

பனி படர்ந்த காட்டுப்பகுதியில் அந்த மலையேறி

02



# கனடாவில் தவறான முடிவு அவசர உதவி எண்ணுக்கு மூன்று லட்சம் அழைப்புகள்

கனடாவில் தவறான முடிவு அவசர உதவி எண்ணுக்கு மூன்று லட்சம் அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டு காலப்பகுதியில் 988 என்ற தவறான முடிவு

தவிர்ப்பு உதவி அவசர அழைப்பு பிரிவிற்கு இவ்வாறு மூன்று லட்சம் தொலைபேசி அழைப்புகளும் குறுஞ் செய்திகளும் கிடைக்க பெற்றுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

04

# வீடுடைப்பு சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது



கனடாவின் மார்க்கம் பகுதியில் வீடு உடைப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

யோர்க் பிராந்திய பொலிஸார் இந்த வீடு உடைப்பு சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து

04



# ஒன்றாரியோ மாகாணத்தில் மின் உற்பத்தி நிலையங்கள்



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோ மாகாண அரசாங்கம், மின் உற்பத்தி நிறுவன நிலையங்கள் அமைப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரத்திற்கான கேள்வி அதிகரிப்பு காரணமாக பாரிய அளவிலான அணு மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்று இடங்களில் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2035 ஆம் ஆண்டை இலக்கு வைத்து இவ்வாறு மின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாகாண சக்திவள அமைச்சர் ஸ்டீபன் லீஸ் தெரிவித்துள்ளார்.

## காணாமல் போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணாமல் போயிருந்தார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ரெட் ஃபேன் கலி பூங்காவில் சேம் பெனாஸ்டிக் என்ற மலையேறி காணாமல் போயிருந்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் தனியாக மலை ஏறுவதற்காக சென்ற நபர் 17ஆம் திகதி வீடு திரும்புவதாக தெரிவித்திருந்தார்.

எனினும் குறித்த நபர் வீடு திரும்பாததை தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீட்புப் பணியாளர்களின் முயற்சியினால் மேற்படி நபர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

காட்டுப் பகுதியில் முகாமிட்டு தான் தங்கியிருந்ததாக அந்த மலையேறி தெரிவித்துள்ளார்.





# றொறன்ரோவில் கடும் பனிப்பொழிவு






றொறன்ரோவில் கடுமையான பனிப்பொழிவு குறித்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு றொறன்ரோவில் அதிகளவில் பனிப் பொழிவு நிலையை அவதானிக்க முடியும் என தெரி விக்கப்படுகின்றது.

இன்றிரவு சுமார் 30 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு தொடர்பில் சில பகுதிகளில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பிலான எச்சரிக்கை அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

றொறன்ரோவின் சில பகுதிகளில் நாளைய தினமும் இந்த பனிப்பொழிவு நிலையை அவதானிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# கஞ்சா கடத்திய இளம் யுவதி கனடிய விமான நிலையத்தில் கைது

சுமார் 45 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா போதை பொருளை பயண பொதிக்குள் மறைத்து கடத்த முயற்சித்த 21 வயதான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடிய பொலிஸார் அந்தப் பெண்ணை கைது செய்துள்ளனர். ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி யுவதி இந்த கஞ்சா போதை பொருளை ஜெர்மனிக்கு கடத்த முயற்சித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்படவிருந்த கஞ்சா போதை பொருளின் சந்தை பெறுமதி 180000 டொலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

21 வயதான ரெனி ஹஸ்தானா ஹென்றி என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான அடிப்படையில் போதைப் பொருளை வெளிநாட்டுக்கு கடத்த முயற்சித்தார் என இந்த பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி பெண் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீடுடைப்பு சம்பவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றனர்.

சந்தேக நபர்கள் வீட்டுக்குள் ஆயுதத்துடன் பிரவேசித்து வாகனம் ஒன்றின் சாவியை தருமாறு மிரட்டி பெற்றுக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மிரட்டி பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த வீடு உடைப்பு மற்றும் வாகன கொள்ளை சம்ப வங்கள் தொடர்பான காணொலிகள் பதிவு செய்யப் பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சந்தேக நபர்கள் பல்வேறு இடங்களில் இவ்வாறு வீடுகளை உடைத்து களவாடியுள்ளதுடன் வாகனங்களை அபகரித்துச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஆயுத முனையில் அச்சுறுத்தி இந்த நபர்கள் வாகன கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப் படுகின்றது.

## கனடாவில் தவறான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனடிய பழக்க அடிமைத்துவம் மற்றும் உளச்சுகாதார நிலையம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

தவறான முடிவு எடுத்துக்கொள்ளும் எண்ணம் உடையவர்கள் மற்றும் வேறு அழுத்தங்களினால் பாதிக்கப் பட்டவர்கள் இந்த அவசர அழைப்பு இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறி விக்கப்பட்டுள்ளது.

இது ஓர் 24 மணித்தியால அவசர அழைப்பு சேவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சேவை தொடர்பில் மக்கள் அறிந்து கொண்டால் கூடுதல் எண்ணிக்கையிலான தொலைபேசி அழைப்புகள் கிடைக்கப் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தொலைபேசி அழைப்பிற்காக சராசரியாக காத்திருக்க வேண்டிய கால அவகாசம் 44 செகண்ட்கள் என தெரிவிக் கப்படுகிறது.